பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 07

செவ்வாய்க்கிழமை
03 டிசெம்பர் 2024

கார்த்திகை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## எம்.பி.க்களின் சலுகைகள்: ஜனாதிபதியிடம் அறிக்கை

கொழும்பு, டிசெ. 3
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 10

# அதிகாரப் பகிர்வு வேறு சமவுரிமை வேறு!

### ஜே.வி.பி.யின் ரில்வினுக்கு மனோ பதிலடி



**கொழும்பு, டிசெம்பர் 3**

மாகாணசபை முறையை நீக்கப்போவதாகக் கூறிக்கொள்ளும் ரில்வின் சில்வா, அதிகாரப் பகிர்வு என்பது வேறு, சமவுரிமை என்பது வேறு என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கனேசன் கூறியுள்ளார். 10



## ஒதியமலைப் படுகொலைகள் நினைவேந்தல் உணர்வுபூர்வம்

முல்லைத்தீவு, டிசெ. 3
முல்லைத்தீவு, ஒதியமலை கிராமத்தில் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழர்களின் 40ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. ஒதியமலைக் 10

## பிரபாகரன் பிறந்தநாள், புலிக்கொடி வழக்குகள் ஜூலைக்குத் தவணை!

10

## புலிகளை எதிர்ப்போரையே கைதுசெய்கின்றதாம் அரசு

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 3
பிரபாகரனுக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் பதிவுகளை மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனால் பிரபாகரனை கடவுள் எனக் குறிப்பிட்டவர் 10

## உள்ளூராட்சித் தேர்தல்: விசேட கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ. 3
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. 10

## சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு, டிசெ. 3
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி இந்த மாதம் 10ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை நவம்பர் மாதம் 5ஆம் 10



## வடதாரகையில் பழுது; பயணிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3
குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கி நேற்று மாலை 4 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கவேண்டிய வடதாரகை பயணிகள் படகு பழுதடைந் 10

### முச்சந்தி முரளி



'வடக்கில வாசல் வைக்கிறதும் வடதாரகைக்கு வருத்தம் வாறதும் புதிசில்லை கண்டியளோ'

றைனோ
சீலிங் ஷீட்
மரவேலைப்பாட்டுத் தோற்றத்துடன்
விரும்பிய நிறத்தை பூசக்கூடிய Design சீலிங் ஷீட்.
நீண்ட பாவனை | குறைந்த செலவு | 60 வருட நம்பிக்கை
RHINO
60 YEARS
www.rhino.lk
I Know Rhino
ரூ. 1,690/- இலிருந்து துரித அழைப்பு 0115 748 728
இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட்

மக்கள் மனம் வென்ற தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தரை பிளவுபடுத்த இரகசிய சதித்திட்டமாம்

## ஓமல்பே சோபிததேரர் பதறுகின்றார்



கொழும்பு, டிசெ.3

**பௌத்தர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தச் சில தரப்புகள் சதித் திட்டங்களை மேற் கொண்டுள்ளன என்று ஓமல்பே சோபித தேரர் குற்றஞ்சாட்டி யுள்ளார்.**

கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இந்தச் சதித்திட்டங்களுக்காக வரையறையின்றி நிதியளித்து வருகின்றன. சில கட்டுக்க தைகளால் மத நம்பிக்கைகளை மட்டுப் படுத்தமுடியாது. ஆனால் அவ்வாறான மட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்குச் சில சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின் றன.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்படியாக பௌத்தர்கள் இடையே பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட் டுள்ளன. பௌத்த தர்மத்தை அடிப்படை யாகக் கொண்டே சிங்களவர்களிடையே பலம் வாய்ந்த இணைப்பு உருவாக்கப்பட் டுள்ளது. கட்டுக்கதைகளை நம்பும்போது மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம் என் பன செல்லுபடியற்ற நூல்களாக மாறிவி டுகின்றன - என்றார். (எ-இ)

# இடைவேளை எடுக்கும் பந்துல குணவர்த்தன!



கொழும்பு, டிசெ.3

அரசியலில் இடைவேளை எடுத்துக்கொள் எப்போகின்றேன் என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை வழங்கி புதிய கொள்கை களைக் கொண்ட அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு எளிய தீர்வுகள் தங்களிடம் உள்ளன என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஜனநாயக ரீதியில் இடமளிக்க வேண்டியது எமது பொறுப்பாகும். அதனால் எந்தவொரு அரசியல் நட வடிக்கையிலும் ஈடுபடாது இடைவேளை எடுத்துக்கொள்ளத் தீர்மானித் துள்ளேன் - என்றார். (எ-இ)

# அதிகாரப் பகிர்வு தேவையில்லை!

## தெற்கில் போர்க்கொடி

கொழும்பு, டிசெ.3

தேசிய ஒருங்கிணைப்புக்குழு என்ற அமைப்பு அதிகாரப்பகிர்வுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி யுள்ளது. இந்த அமைப்பின் செயலர் முன்னாள் கேணல் அனில் அமரசேகர ஒப்பமிட்டு, ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எழுதி யுள்ள கடிதத்தில், புதிய அரசமைப்பில் மாகா ணங்களுக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை என்றும், அதிகாரப்பரவலாக்கம் போதுமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண மட்டத்திலோ, மாவட்ட மட்டத்திலோ அல்லது உள்ளூராட்சி கட்டமைப்பினூடாகவோ அதிகாரங்கள் பரவலாக்கப்படலாம், ஆனால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படக்கூடாது. படை யினரின் கண்ணீரிலும், இரத்தத்திலும் கட்டியெ ழுப்பப்பட்ட இந்த நாடு ஒற்றை ஆட்சிக் கட்ட மைப்பை பாதுகாக்கவேண்டும். சமஷ்டியை நோக்கி அடியெடுத்து வைக்கக்கூடாது.

தமது உயிர்களை தியாகம் செய்த படையினரின் ஆன்மாக்கள் அதிகாரப்பகிர்வுக்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டாது. துப்பாக்கியால் அடைய முடியாததை வாக்குச்சீட்டினூடாக அடையப் பார்க்கின்றனர் எனவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-25.6)

# சுதந்திரதின விழாவுக்கு தூதுவர்களுக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ.3

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் உத்தி யோகபூர்வமாக நற்சான் றிதழ்களை கையளித்த புதிய தூதுவர்கள் மற்றும் தூதுவர்கள் இலங்கை யின் சுதந்திர தின விழா வில் கலந்துகொள்ள வேண்டும் என்று வெளிவி வகார அமைச்சர் விஜித ஹேரத் அழைப்பு விடுத் தார். புதிதாக நியமிக்கப் பட்ட தூதுவர்களுடனான சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற போதே வெளிவிவகார அமைச்சர் இந்த அழைப்பை விடுத்துள் ளார். (எ-ரி)



# ஜப்பான் திட்டங்களை மீளக்கோரும் சஜித்!

கொழும்பு, டிசெ.3

கடந்தகாலங்களில் ஜப்பான் அரசாங்கத்தால் இலங் கையில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை மீள ஆரம் பிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவருக்கும், ஜப்பான் தூதுவர் இசோமடா ஆகியோ ருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டங் களை மீள நடைமுறைப்படுத்துவதற்காக எதிர்க்கட்சி யில் இருந்து பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (எ-இ)

# மறுசீரமைப்பில் எதிர்க்கட்சிகள்!

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உயர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த கலந்துரையாடல்களை ஆரம்பித்துள் ளன என்று தகவல்கள் வெளியாகியுள் ளன. கடந்த தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவை அடுத்து எதிர்க்கட்சிகள் இந்த நடவடிக்கையில் இறங்கியுள் ளன. கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை களில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும் கட்சித் தலைவர் கள் தீர்மானித்துள்ளனர் என்று கூறப் படுகின்றது. (எ-33)

# தேங்காய் விலை கிடு கிடு உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.3

சந்தையில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபா வரையில் உயர்ந்துள்ளது என்றும், தற்போது தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-25)

# காற்றின் தரம் அபாயம்!

கொழும்பு, டிசெ.3

கொழும்பு மற்றும் நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் குறை வடைந்துள்ளது என்று தேசிய கட் டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்கு இந்த நிலை தொடரலாம் என்று சுற்றாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரி வித்துள்ளார். (எ-45)



# வழமைக்குத் திரும்பியது ரயில்சேவை

கொழும்பு, டிசெ.3

மலையகத்துக்கான ரயில் சேவை நேற்றுமுன்தினம் முதல் வழ மைக்குத் திரும்பியுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித் துள்ளது.

மண்சரிவு காரணமாக 5 நாள்க ளாக ரயில் சேவையில் பாதிப்பு ஏற்பட்டிருந்த நிலையில், தற் போது ரயில் சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-ரி)

# வீதிகளின் சீரமைப்புக்கு விசேட குழு

கொழும்பு, டிசெ.3

பலத்த மழையுடனான வானிலை யால் ஏற்பட்ட அனர்த்தங்களால் சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங் கள் தொடர்பான தகவல்களை சேக ரிக்கும் நடவடிக்கைக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.பீ.சூரியபண்டார தெரிவித் தார். சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களை விரைவாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (எ-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசராக பதவியேற்றார் மூர்து

கொழும்பு, டிசெ.3



**இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் மூர்து பெர்னாண்டோ ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் நேற்றுத் திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வு பெற்ற நிலையில், மூர்து பெர்னாண்டோ இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.**

1985ஆம்ஆண்டுசட்டமாஅதிபர்திணைக்களத்தில் இணைந்துகொண்ட இவர், 1997ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும், 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்று, 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம்உயர்நீதிமன்றநீதியரசராகநியமிக்கப்பட்டார். 2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி பதில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். (ஏ-45)

## நிரந்தர நியமனத்துக்காக கொழும்பில் போராட்டம்

கொழும்பு, டிசெ.3

ஆசிரியர் சேவையில் தங்களை நிரந்தரமாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவொன்று நேற்றுக் கல்வி அமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது. போராட்டத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## நீலங்கேயின் சகா கைது!


போதைப்பொருள் கடத்தல்காரரான 'பாணந்துறை நீலங்கே' என்பவரின் நெருங்கிய சகா ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். சந்தேகநபரிடமிருந்து 7 இலட்சம் ரூபா பணம், 52 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பனகைப்பற்றப்பட்டுள்ளன என்றும், மேலதிக விசாரணை கள்முன்னெடுக்கப்படுகின்றன என்றும் களுத்துறைப்பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-25)

## வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

கொழும்பு, டிசெ.3

காலாவதியான பொருள்களைச் சந்தைக்கு விநியோகிக்கும் வர்த்தகர்களைக் கண்டறியும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகாரசபை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுள்ள சோதனை நடவடிக்கைகளில் தகவல்களைத் திரிவுபடுத்தி சந்தைக்கு விநியோகிக்கத் தயாராகவிருந்த அரிசி, கடலை, பேரீச்சம்பழம் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தகவல்கள் பொதுமக்களுக்கு தெரியவருமானால் நுகர்வோர் அதிகாரசபையின் 1977 என்ற துரித முறைப்பாட்டு இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-ரி)



## இரா.சம்பந்தனின் இல்லம் கையளிப்பு

கொழும்பு, டிசெ.3

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லம், அவர் இறந்து ஐந்து மாதங்களின் பின்னர் நீதித்துறை, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபை, உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கு அமைச்சு ஐந்துக்கும் மேற்பட்ட நினைவூட்டல்களை வழங்கியிருந்தது என்று கூறப்படுகிறது. கொழும்பு - 7, மலலசேகர மாவத்தையில் உள்ள இந்த உத்தியோகபூர்வ இல்லம் சம்பந்தனுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. (ஏ-இ)

### தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

## சர்ச்சைக்குரிய வினாக்களுக்கு திறந்த புள்ளி வழங்க பரிந்துரை!

கொழும்பு, டிசெ.3

2024ஆம் ஆண்டுக்கான தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையின் மூன்று வினாக்களுக்கு திறந்த புள்ளிகள் வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாளின் மூன்று வினாக்கள் சமூக ஊடகங்களில் கசியவிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் இதனைத்தெரிவித்தார். அதேவேளை, இந்த மனுக்கள் எதிர்வரும் 11ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஏ-இ)




அநுர அலையை விடவும் பெரிய அனகொண்டா அலை வந்தாலும் வீட்டுக்கட்சிக்காரரை திருத்தவே ஏலாது போலதான் கிடக்குது. எலக்சன் அமளியில அமந்து கிடந்த உட்கட்சிக் கொல்பாடுகள் திரும்பவும் தொடங்கிட்டுதாம். எலக்சனில போட்ட வேட்பாளர் பட்டியல் பிரச்சினையால மனம்வெறுத்துப்போன மாவையர், தான் கட்சித் தலைவர் பதவியில இருந்து விலகிறதாவும், தனக்குப் பதிலா கட்சியால தெரிவு செய்யப்பட்ட தலைவர் எண்ட அடிப்படையில சிறியரை தலைமைப் பதவியை ஏற்குமாறும் ஒரு கடிதம் எழுதினவர். ஆனால் அவர் இந்தக் கடிதத்தை முறைப்படி கட்சியின்ர பதில் செயலாளருக்குத்தான் எழுதியிருக்கவேணும். ஆனால் மாவையர் இந்தக் கடிதத்தை நேரடியா சிறியருக்கு எழுதி, அதின்ர கொப்பியைத்தான் பதில் செயலாளருக்கு அனுப்பினவர். கடிதம் தனக்கு முறைப்படி வரேலை எண்டு சொல்லிப்போட்டு, அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல் எலக்சன் வேலையில கட்சியின்ர பதில் செயலாளரான டாக்குத்தர் இறங்கிட்டார்.

இப்ப எலக்சன் முடிஞ்ச கையோட ,மாவையரின்ர கடிதத்தை தூசு தட்டி, அந்தக் கடிதத்தின் படி ஏன் மாவையரை தலைவர் பதவியில இருந்து விலக்கக் கூடாது எண்டு விளக்கம் கேட்டு ஒரு கடிதத்தை பதில் செயலாளர் அனுப்பியிருக்கிறாராம். கடிதம் அனுப்பேக்க மாவையர் மனம் வெறுத்துப்போய்த் தான் இருந்தவர். ஆனால் பிறகு கட்சிக்காரர் அவரை மதிச்சு போய் ஆசி வாங்கின தோட, தேர்தல் விஞ்ஞாபனத்தைக்கூட அவரின்ர வீட்டில வைச்சுத் தான் வெளியிட்டவை. அதால இப்ப அவருக்கு கட்சியை விட்டுப் போக மனமில்லை. ஆளுக்கு உடம்பும் கொஞ்சநாளா ஏலாது. அதால தலைவர் பதவியில இருந்து விலகிறதா தான் கடிதம் அனுப்பினதையே மறந்து போயிருந்த மாவையருக்கு, இடி விழுந்தமாதிரி இப்பிடியொரு விளக்கக்கடிதம் வந்ததால என்ன செய்யிறதெண்டு தெரியாமல் ஏங்கிப்போயிருக்கிறார். அநேகமா அந்தப் பதவி விலகல் கடிதத்தை வாபஸ் வாங்கிறமாதிரி இன்னொரு கடிதம் அனுப்பினால் தான் அவரின்ர தலைமைப் பதவி தப்பும். இல்லாட்டி அவரின்ர கோரிக்கையை ஏற்றதாச் சொல்லி, அடுத்த கூட்டத்திலேயே தீர்மானம் எடுத்து மாவையரை தலைமைப் பதவியில இருந்து கட்சி நிப்பாட்டினால், அவரால ஒண்டும் செய்யேலாது.

அதைவிட பொதுவேட்பாளரை ஆதரிச்சதெண்டு சொல்லி, கட்சிக்காரர் சிலருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிற வேலையளையும் பதில் செயலாளர் தொடங்கியிருக்கிறார் எண்டு கேள்வி. ஆனால் அதைப்பற்றி ஆரும் மூச்சுவிடுகினமில்லை. அநேகமா அதுக்கும் ஒரு மன்னிப்புக்கடிதம் அனுப்பாட்டி, அவையில யாப்பின் படி நடவடிக்கை எடுப்பமெண்டு கட்சியின்ர சில முக்கியமான புள்ளியள் தங்களுக்கு நெருக்கமானவைக்குச் சொல்லியிருக்கினமாம். இப்பிடி தலைவர் பிரச்சினை, ஒழுக்காற்று விசயம் எண்டு வீட்டுக்கட்சி இன்னும் கொஞ்சநாளைக்கு அல்லாடப்போகுது. அதைவிட, தலைவர் பதவி மட்டுமில்ல செயலாளர் பதவிக்கும் புது ஆக்கள் வரப்போயினமாம். அதுக்கும் திரைமறைவில சிலர் காய்நகர்த்திக்கொண்டிருக்கினமாம். அப்பிடி அடுத்த செயலாளரா ஆர் வரப்போறார்? தன்ர பதவியை விட்டுத்தர டாக்குத்தர் என்னெண்டு ஓமெண்டவர்? எல்லாத்துக்கும் நாளைக்கு பட்சி விடை சொல்லும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டாகும். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் ஏற்படும். உறவினர்களுடன் அனுசரித்துச்செல்வது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில்சிறு குழப்பம்ஏற்பட்டுநீங்கும். குடும்பவிஷயமாகவெளியூர்ப்பயணம்மேற்கொள்ள நேரிடும். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு ஏதுவுமிருக்காது.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** உற்சாகமான நாளாக அமையும். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பயணத்தின்போது கவனம் தேவை.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவும் ஏற்படும்.

**தனுசு:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரைவதுடன் கடனும் வாங்க நேரிடும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தைவழியில்சிலபிரச்சினைகள்ஏற்பட்டாலும்சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சிகள் சாதகமாகும். மற்றவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.





## சுக்கிரவார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.3

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவார கந்தபுராண தொடர் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞான பானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையைப் பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் த.மனோஜ்குமார் " மோனநீங்கு படலம் " எனும் விடயப்பொருளிலும் வழங்கவுள்ளனர். அதிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## உச்சம்தொடும் மரக்கறி விலை

கொழும்பு, டிசெ. 3

நுவரெலியா மத்திய சந்தையில் மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுவதால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது. அத்துடன் சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக மரக்கறிகளின் விலை மேலும் உயர்வடையும் சாத்தியம் உள்ளதாக நுவரெலியா வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## திருவாசக சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 34 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் பிரசங்க வாரிதி ச.நவநீதன் வழங்கவுள்ளார். அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)



## திருமறைக் கலாமன்றத் தினமும் வைரவிழா ஆரம்ப நிகழ்வும்

திருமறைக் கலாமன்றத்தினமும், வைர விழா ஆரம்ப நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள கலைஞானசுரபி தியான இல்லத்தில் இன்று காலை 6.30 மணிக்கு நன்றி வழிபாடும், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு குருதிக்கொடை நிகழ்வும், யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் மாலை 4 மணிக்கு கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'நஞ்சுண்ட கண்டன்' நாடகம், 'விண்ணக வீரன்' வடமோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## வெள்ள அனர்த்தத்தால் படையெடுக்கும் பாம்புகள்

யாழ்ப்பாணம், டிசெ. 3

வீடுகளைச் சுற்றி வெள்ளம் சூழ்ந்து காணப்படுவதால் பாம்புகள் வீடுகளுக்குள் வரும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வீடு செல்லமுடியாது முகாம்களில் தங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். வெள்ள அனர்த்தம் காரணமாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். வெள்ளத்தை அகற்றிப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தினாலேயே எம்மால் வீடுகளுக்குச் செல்லமுடியும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மழைவிட்டும் தொடரும் இடர்கள்

பெங்கால் புயல் இலங்கையிலிருந்து முற்றாக நீங்கி, தமிழகத்தைத் தாக்கியதைத் தொடர்ந்து வலுவிழந்து காணாமற்போய்விட்டது. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருந்த வெள்ளப் பேரிடர் நிலை நீங்கி தற்போது மெல்லமெல்ல இயல்பு வாழ்வுக்கு மக்கள் திரும்பத் தொடங்கியுள்ளனர். இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்த பெரும்பாலான மக்களும் தம் இல்லங்களுக்கு சென்றுவிட்டனர். வெகுசிலரே இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால், இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டு இயல்புநிலை முழுதுமாகத் திரும்பிவிட்டதாக எண்ணிக்கொள்ளமுடியாது. வெள்ளப் பேரிடர்கள் ஏற்படுத்தும் 'உண்மையான ஆபத்து' ஒருபோதும் ஓரிரு நாள்களில் காணாமற்போவதில்லை. இன்னும் சொல்லப்போனால், ஆபத்து இப்போதுதான் அருகில் வருகின்றது.

யாழ்ப்பாணத்திலும், வடக்கின் இதர பகுதிகளிலும் கடந்த ஒரு வாரத்தில் கொட்டித் தீர்த்த கனமழையால், அனேகமான குடிதண்ணீர் கிணறுகளுக்குள் வெள்ளநீர் கலந்துள்ளது. விலங்குகளின் கழிவுகள் உட்பட ஏராளமான அசுத்தமான சமாச்சாரங்களைக் கொண்டதாகவே தற்போது பல கிணறுகள் காணப்படுகின்றன. எனவே, குடிதண்ணீர் சுத்தத்தைப் பேணவேண்டியது இக்காலங்களில் மிகமிக அவசியம். கொதித்து ஆறிய நீரைப் பருகுவதை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டிய காலமிது. கொலரா, வயிற்றோட்டம் போன்ற நோய்நிலைகள் எங்களைக் கௌவிப்பிடிப்பதற்கு எம் அக்கறையீனங்கள் காரணமாக அமைந்துவிடக்கூடாது. குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் நாள்பட்ட நோயாளர்களின் உடல்நலனில் நாம் கூடுதல் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

எங்கும் தேங்கியிருந்த மழைநீர், டெங்கின் பெருக்கத்தையும் தேசிய அளவில் தீவிரப்படுத்தியிருக்கின்றது. இலங்கையில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசியத் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன. நாடளாவிய ரீதியில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 47 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. அடுத்த சில நாள்களில் தேசியப் பேரிடராக அறிவிக்கப்படும் அளவுக்கு டெங்கின் தாக்கம் தீவிரமாகியும் - பூதாகரமாகியும் வருகின்றது. எனவே, வெள்ளப் பேரிடர் ஏற்படுத்திய சூழலியல் சீர்குலைவை மிக விரைவில் இயல்புக்குக் கொண்டுவருவதுடன், நுளம்புக் குடம்பிகள் எமது வசிப்பிடங்களில் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயக் கடமை எமக்குள்ளது.


எல்லாவற்றையும் விட, வெள்ளப் பேரிடரால் விஷஜந்துகள் குடிமனைகளுக்குள்ளும், குடிமனைகளுடன் தொடர்புடைய பகுதிகளிலும் (விறகு கொட்டில்கள், வாகனத் தரிப்பிடங்கள், தாழ்வாரங்கள்) அத்துமீறி நுழைந்து பதுங்கியிருக்க வாய்ப்புகள் அதிகம். எனவே, அவ்வாறான ஆபத்துகள் உங்களுக்கு அருகில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். மழை நீங்கிய பின்னரும் நீங்காத தூவானம் போன்று, புயல் நீங்கிய பின்னரும் அது தந்துள்ள ஆபத்துகள் எம் அருகிலேயே இன்னும் இருக்கின்றன. உண்மையில் புயலை விடவும் ஆபத்தான அம்சங்கள் இவைதான். எவ்வளவுக்கெவ்வளவு விரைந்து செயற்படுகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

வெற்றிக்கான இரகசியம் என்று எதுவும் இல்லை. இது முன்னேற்பாடு, கடின உழைப்பு மற்றும் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளல் இவைக்கான பிரதிபலனாகும்.

– கொலின் பவல் –




# பரீட்சை முடிந்ததும் தேர்தல் அறிவிப்பு!

## தேர்தல்கள் திணைக்களம் தீர்மானம்

**கொழும்பு, டிசெ.3**

**க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னரே உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்டால் வேட்பாளர்கள் பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடும் என்பதாலேயே தேர்தல்கள் ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது. இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கட்சித் தலைவர் கூட்டம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான வேட்புமனுக்களை மீள அழைப்பது தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (எ-45)

# கொள்கைப் பிரகடன விவாதம் இன்று!

கொழும்பு, டிசெ.3

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நாடாளுமன்றம் கூடவுள்ளது. அதில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை நாளை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும் என நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-45)

# 30 சதவீத மின் கட்டண குறைப்பு


கொழும்பு,டிசெ.3

நாங்கள் ஏற்கனவே வாக்குறுதி அளித்தபடி அடுத்த மூன்று வருடங்களில் நிச்சயம் 30 வீத மின்சாரக் கட்டணக் குறைப்பை நடைமுறைப்படுத்துவோம் என வர்த்தக, கூட்டுறவு, அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ-33)

# காலியிலும் 'போர்ட் சிற்றி'

கொழும்பு போர்ட் சிற்றியைப் போன்று காலியிலும் 45 ஹெக்ரேயர் பரப்பில் துறைமுக நகரத் திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு கரையோரப் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. இது 850 மீற்றர் நீளமும் 150 மீற்றர் அகலமும் கொண்டதாக வடிவமைக்கப்படவுள்ளது. (எ-33-6)



# லொஹானின் மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.3

பதிவுசெய்யப்படாத சொகுசு வாகனம் தொடர்பான வழக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி சஷி பிரபா ரத்வத்த ஆகியோருக்கு விதிக்கப்பட்ட விளக்கமறியல், எதிர்வரும் 6 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - கார்த்திகை - 19
04.12.2024
சுபநேரம் : 04.45 - 06.15
ராகுகாலம் : 12.15 - 01.45

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் , சிற்றுண்டிச் சாலைகள், நடமாடும் கடைகள், மலசல கூட சுத்திகரிப்பு பணிகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி , கேள்வி அறிவித்தல் - 2025 (01.01.2025 - 31.12.2025)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1.180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 03.12.2024 - 16.12.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 17.12.2024 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 17.12.2024 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 17.12.2024 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக. வாடகை. வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகள் நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலக நேரத்தில் மாநகர சபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.
7. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகைத்தொகையின் 1/3 வைப்புக்கட்டணத்தை 23.12.2024ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும்

**இறைச்சிக்கடைகள்.கருவாட்டுக்கடைகள் பல்பொருள் வாணிபக்கடைகள். சந்தைகள் .சிற்றுண்டிச்சாலைகள். நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்.**

| இல | இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் , பல்பொருள்வாணிபக்கடைகள், சந்தைகள் , சிற்றுண்டிச்சாலைகள், நடமாடும்கடைகள் விபரம் | கடை இல | பிணைப் பணம் | ஆரம்ப கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 57,100.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 510,000.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 515,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 120,000.00 |
| 5 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 6 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 140,000.00 |
| 7 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,001,150.00 |
| 8 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 705,887.02 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 712,200.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 325,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 13 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 15 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.45 |
| 16 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 17 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.01 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 434,355.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 23 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 668,000.00 |
| 24 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 90,000.00 |
| 25 | புங்கன்குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,564.56 |
| 26 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 94,500.00 |
| 27 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 01 | | 20,000.00 | 181,100.00 |
| 28 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 01 | | 20,000.00 | 211,000.00 |
| 29 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 02 | | 20,000.00 | 211,000.00 |
| 30 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | | 20,000.00 | 211.100.00 |
| 31 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | | 20,000.00 | 190,000.00 |

**மலசல கூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை கேள்வி அறிவித்தல்**

| இல | விபரம் | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | நவீன சந்தையில் அமைந்துள்ள மலசலகூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | 1,000.00 | 24,000.00 |
| 2 | நல்லூர் சந்தைக்கடைப் பகுதியில் அமைந்துள்ள மலசல கூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | 1,000.00 | 12,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்.
மாநகர சபை .யாழ்ப்பாணம்.

(CR/43815) J-1


# கிணற்றில் குளித்த பூசகர் தவறி விழுந்து உயிரிழப்பு

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த போது தவறி விழுந்த பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் சுதுமலை தெற்கு, மானிப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

மகாலிங்கம் கருணாகரன் (வயது-52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பி கிணற்றில் தோய்ந்து கொண்டிருந்தபோது கிணற்றில் தவறி விழுந்துள்ளார். யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-100-26)

# இறைச்சிக்காக மாடுகளை கடத்திய நபர் கைதானார்!

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் நீண்ட நாள்களாக இறைச்சிக்காக மாடுகளைக் கடத்தி வந்த நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிறைமாத பசுவொன்றைக் காணவில்லை என்று பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பளைப் பகுதியைச் சேர்ந்தவர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது சந்தேகநபர் ஐந்து மாடுகளை இறைச்சியாக்கியமையை ஒப்புக் கொண்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-113)

# பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.3

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகமும், வடமராட்சி தெற்கு, மேற்கு கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேசப் பண்பாட்டு விழா-2024 நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கரவெட்டி மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் திருமண மண்டபத்தில் கரவெட்டிப் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான ஈஸ்வரானந்தன் தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரட்ணம் சிறப்பு விருந்தினராகவும், மூத்த கலைஞர்களான கிருஷ்ணபிள்ளை நடராசா, திருமதி தம்பு சரோஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-66)

# பதிவுகளை மேற்கொள்க

யாழ்ப்பாணம், டிசெ. 3

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் குப்பிழானில் விவசாயப் பயிர்கள் அழிவடைந்தவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை குப்பிழான் விவசாய சம்மேளனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம-66)


றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ். நகர்.
புதிய கல்வியாண்டு - 2025
தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium
ஆரம்பம் 04.01.2024 புதன்கிழமை (காலை 7.00 மணி)
கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T. சிங்களம்
ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!
குறிப்பு : • மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும். (புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும்.)
• ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.
- இயக்குநர் -
(18425)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் வெண்ணிறத் தத்தி

யாழ்ப்பாணம், டிசெ.3

தென்மராட்சிப் பிரதேச வயல்களில் கபில மற்றும் வெண்ணிறத் தத்திகளின் தாக்கம் பரவிவருகிறது. மறவன்புலவு, தனங்கிழப்பு போன்ற பிரதேச வயல்களில் நோய்த்தாக்கம் அடையாளம் காணப்பட்டுள்ளது. விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை விவசாயிகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(எ-25,17)


**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**
**நெய்தல் முன்பள்ளியில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2025**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் மயிலிட்டி கிராமக்கோடு பகுதியில் நடாத்தப்படும் நெய்தல் முன்பள்ளிக்கு 2025 ஆம் ஆண்டில் புதிய மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

முன்பள்ளியில் கல்விகற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.

- எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- தகைமை பெற்ற ஆசிரியர்களால் நவீன தொழல்நுட்ப வசதிகளுடன் கல்வி கற்பிக்கப்படுகின்றது.
- இலவச சீருடை, சத்துணவு, சுற்றுலா வசதிகள் வழங்கப்படும்.

குறித்த முன்பள்ளியில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள வரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம், மயிலிட்டி உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களைப் 2025.01.30 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த மயிலிட்டி உப அலுவலகத்திலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

தலைமை அலுவலகம் - 021 224 1130
மயிலிட்டி உப அலுவலகம் - 021 224 5230

செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
2024.12.03



**Labouter ஆண் நாய் விற்பனைக்கு**
**Labouter இன**
**ஆண் நாய் 6 மாத குட்டி**
**விற்பனைக்கு உண்டு.**
**077 122 9019**
(CS/56809) J-1




**கேள்வி அறிவித்தல் திருத்தம்**
**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024**

28.11.2024 ஆம் திகதிய பத்திரிகையில் 07 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் கேள்வி அறிவித்தல் நிபந்தனை இலக்கம் 04 ஆனது ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திகரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

**த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.** 03.12.2024
(CR/43816) J-1


## மரண அறிவித்தல்



### சிவலிங்கம் இராசரத்தினம்

**(உரிமையாளர் - மங்களா ஸ்ரோர்ஸ்)**

பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சிவலிங்கம் இராசரத்தினம் அவர்கள் கடந்த (30.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற துரைராசா, நடராசா, அழகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கலையரசி (நியூசிலாந்து முன்னாள் ஆசிரியை யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), எழிலரசி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணலிங்கம் (நியூசிலாந்து), அசோக்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகிர்தா (நியூசிலாந்து), மகிந்தன் (நியூசிலாந்து), விகிந்தன் (நியூசிலாந்து), ஷாம் (நோர்வே), ஷத்வி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 764 2009**

**மங்களா ஸ்ரோர்ஸ்,**
**பண்டத்தரிப்பு.**

(CS/56807) J-1

## மரண அறிவித்தல்

**மண்ணில்** 13 . 04 . 1947



**விண்ணில்** 01 . 12 . 2024

### பிறிச்சற்றம்மா செல்லத்தம்பி (வேவி)

இல 41/13 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும், அன்டர்சன் வீதி, வூட்லான் அவனியூ, கொழும்பு எனும் முகவரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிறிச்சற்றம்மா செல்லத்தம்பி (வேவி) அவர்கள் நேற்றுமுன்தினம் (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்து செல்லையா - ராசமணி கமலம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்து செல்லத்தம்பி அவர்களின் பாசமிகு மனைவியும், கீத்தா கமலினி (கொழும்பு), லூக் வில்சன் (ஹொலனட்), சாம் யோண்சன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நரேந்திரநாதன் மற்றும் சனிற்ரா, லென்சியா ஆகியோரின் அன்பு மாமியாரும், டெறிக், கிஷன், லெற்ரீசியா ஈத்தன், லரிஷா, றோய்ஸன், ஹரிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிலோமினா சில்வெஸ்ரர், றெஜினா, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.12.2024) புதன்கிழமை இல 41/13 மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 03.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா மறுவாழ்வு முற்றத்தில் (சேமக்காலை) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**


**மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்**

(CS/56808) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1944



மறைவு 23 . 11 . 2024

### சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா

**(பிராந்திய கணக்காளர் இ.போ.சபை)**

யாழ். தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா அவர்கள் 23-11-2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - முத்துரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா - சரச்சந்திராகாந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தகாந்திஅம்மாள் அவர்களின் பாசமிகு கணவரும், துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), லக்ஷ்யாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமா, திருப்பதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவதரன், தர்சிகா, தரணிகா (லண்டன்), பவித்திரன் (அவுஸ்திரேலியா), சந்தோஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், கோபால், இந்தி, அம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (04.12.2024) புதன்கிழமை முற்பகல் 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்வதற்காக Holders Hill Rd, London Nw7 INB, 4K என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**துஷ்யந்தன் - மகன் - +61 414 911 109**
**லக்ஷ்யாணி - மகள் - +44 783 768 3754**
**கோபால் - மைத்துனர் - +44 796 088 9339**

(CS/56812) J-1

நாஹா மருத்துவ நிலையம்
கை, கால் செயலிழப்பு, தீவிர
முள்ளந்தண்டு பாதிப்பு, மாறாதபுண்,
அல்சர், ஆஸ்மா, சிறு நீரகப் பாதிப்பு,
முழங்கால்வாதம் முற்றிலும் குணமாதல்.
வங்கி முன் லேன்
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
மானிப்பாய். T.P: 077 321 2740
(CS/56805) J-1

## மாற்றுத்திறனாளிகள் தினவிழா

யாழ்ப்பாணம், டிசெ.3


யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினவிழா ஊரெழு பலாலிவீதியில் உள்ள என்.கே. மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ்.வி.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆசிரியரும், ஓய்வுநிலை சிரேஷ்ட விரி வுரையாளருமான வி.எஸ் குணசீலன், விருந்தினர்க ளாக யாழ். பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆன் அனிற்றா கலையரசன், என். கே. மண்டப உரிமையாளர் ந. நந்தகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்

(ஏ-ரி-10)

## 7ம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 20 . 08 . 1955



இறப்பு 03 . 12 . 2017

### அமரர் வல்லி மகேந்திரன்

(சமாதான நீதவான்-JP)

அன்புள்ள அப்பா அப்பா
யாருமே உன்போல் இல்லை மண்மேலே
எமக்கெது தேவை உலகிலே
கொடுத்திடுவாய் நீ முதலிலே
வேண்டாமல் தரும் தெய்வம்
நீதானே உண்மையிலே........

அன்புள்ள அப்பா அப்பா
தாயையும் உன்னில் கண்டேன்
அன்பாலே
தூசிதனை தொடவும்
விடமாட்டாய்

தோளில் எமை சுமந்தே
நடை போட்டாய்
அன்புள்ள அப்பா அப்பா
தோழன் என நீ நடந்தாய்
தோல்விகளை ஜெயித்திட
வரம் தந்தாய்
வாழ்ந்த காலத்தில் எமை
வான் போற்ற வளர்த்த எம் தெய்வம்
நீ தானே.......

(CS 43818)V-1




உமை நினைத்து வாடும்.........
மனைவி-தேவமலர்.
பிள்ளைகள்- மதன், மதனா, மோகன்ராஜ், பிறேமன்.
மருமக்கள்- சிந்துஜா, தீபன், தனுசா, தனுசியா
பேரப்பிள்ளைகள்- திரிஷிகா, அப்ஷிகா, அனன்யா, சந்தோஷ்,
சஞ்சனா, ஹரிகணன், யஸ்மித்ரா, அஸ்வத், சஞ்சை, ஆரத்தியன், சஜித்.

**துன்னாலை மேற்கு, கரவெட்டி. 077 707 8628**

## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 04 . 1949



விண்ணில் 30 . 11 . 2024

### இரத்தினம் அருணகிரிநாதன்

(ஓய்வு பெற்றஇ.போ.ச திடீர் பரிசோதனைக் குழு அதிகாரி கோண்டாவில்)

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் அருணகிரிநாதன் அவர்கள் (30.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதியினரின் மருமகனும் சரசவதனி அவர்களின் பாசமிகு கணவரும் சிவபாக்கியம், விக்னேஸ்வரராஜா, சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஜந்தா (கனடா), அகிலன் (கிராமசேவையாளர் பிரதேச செயலகம் உடுவில்), அனுஷியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கதிர்க்கரன், திவ்யா, இராகுலன் ஆகியோரின் பாசமிகு மாமனும் கவிஷ்னா, அபினாஷ், சாதனா ஆகியோரின் அன்புப் பேரனும் மனோகரன், பத்மினி, மனோறதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


**ஏழாலை வடக்கு,**
**ஏழாலை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 56813) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 03 . 1941



மறைவு 30 . 11 . 2024

### மாதர் கதிரவேலு (சாமியார்)

அச்சுவேலி தெற்கு "விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் கதிரவேலு (சாமியார்) கடந்த (30.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாதர்-இளையபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் இளையதம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கதிரவேலு இராசமுத்து (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை, தம்பித்துரை, தம்பிராசா மற்றும் இராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபிராமி, வேணுகோபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகநேசன் (குடியேற்ற உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-கரைச்சி), கயல்விழி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகன், கஜானன், ஜாகவி, சஹானா, நர்த்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**விக்கினேஸ்வரா வீதி,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 903 7464, 074 039 0969**

(CR 43819) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதாட்டியைக் காயப்படுத்தி 20 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், டிசெ. 3
காரைநகர் - பொன்னாவெளி களபூமி பகுதியில், மூதாட்டியொருவரைத் தாக்கிக் காயப்படுத்தி நேற்றுமுன்தினம் இரவு 20 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.
தனியாக வசித்துவந்த 76 வயதுடைய மூதாட்டியைத் தாக்கிக் காயப்படுத்தியே இந்த நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. நேற்றுக்காலை காயங்களுடன் காணப்பட்ட மூதாட்டி அயலவர்களின் உதவியுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ம-125)

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 11 . 1972



மறைவு
01 . 12 . 2024

### மகாலிங்கம் கருணாகரன் (குட்டி ஐயா)

தாவடி மானிப்பாய் வீதி, சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கருணாகரன் (குட்டி ஐயா) அவர்கள் கடந்த (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 407 4286**

**தகவல்:**
**மனைவி.**

(CS 1003) V-1





யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி, சரசாலை, செல்வபுரம், நாவாந்துறை, குருநகர் எனப் பல பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கே இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-10)

## பெறுகை அறிவித்தல்
## மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.
## தனியார் பாதுகாப்புச் சேவை - 2025

1. மாந்தை கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் தொலைபேசி:-0212283475 தொலைநகல்: 0212283476 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 03.12.2024 முதல் காலை 09.00 மணியிலிருந்து மாலை 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர் ,மாந்தை கிழக்கு பிரதேசசபை பாண்டியன்குளம் எனும் இடத்திலிருந்து 03.12.2024ம் திகதியிலிருந்து 16.12.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச் சபை, மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் எனும் முகவரிக்கு 16.12.2024 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | | கேள்வி பிணை வைப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இரவு | பகல் | கேள்வி செல்லுபடியாகும் நாட்கள் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை தொகை | கேள்வி பிணை செல்லுபடியாகும் நாட்கள் |
| 1 | NP/14/44(2)/03 /Sec.Ser/2025 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 01 | 01 | 49 நாட்கள் | 03.02.2025 | 10,000.00 | 03.03.2025 |

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**த்லைவர்**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.**
**02.12.2024**

(CR/43814) J-1

# எச்.ராஜாவுக்கு சிறைத்தண்டனை

சென்னை, டிசெ.3
தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எச்.ராஜாவுக்கு எதிராகத் தொடரப்பட்ட இரு வழக்குகளில் தலா 6 மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளது நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம்.
எச்.ராஜா 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெரியார் சிலையை உடைப்பேன் என்று சமூகவலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார் என்றும், 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியை விமர்சித்து சமூகவலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார் என்றும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.
இது தொடர்பான வழக்குகள் சென்னையில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தன.
இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பளித்த நீதிபதி பொலிஸார் தரப்பில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து, அவருக்கு இரு வழக்குகளிலும் தலா 6 மாத சிறைத் தண்டனையும், தலா 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் மேன்முறையீடு செய்ய ஏதுவாக தண்டனையை நிறுத்திவைக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

# வீட்டிலிருந்தோருக்கு அச்சுறுத்தல்: வட்டு. பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 3
பொன்னாலையில் உள்ள வீடொன்றுக்குள், இளைஞர்கள் சிலரைக் கொண்ட குழுவொன்று அத்துமீறி நுழைந்து வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. தாக்குதலின் பின்னணி தொடர்பில் சில தகவல்கள் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெங்கால் புயலால்
# மக்களின் இயல்புநிலை சென்னையில் பாதிப்பு



பெங்கால் புயல் காரணமாக பெய்த பலத்த மழையால் தமிழ்நாட்டின் சென்னையில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த பெங்கால் புயல் நேற்றுமுன்தினம் இரவு புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது. தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் புகுந்ததால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதுடன் சென்னையின் பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கின.
சென்னை, புறநகர் அரசு மருத்துவமனைகளில் மழைநீர் உள்ளே புகுந்ததால் பிரசவ தாய்மார்கள், குழந்தைகள், நோயாளிகள் கடும் அவதிக்குள்ளாகினர். அதேவேளை, சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டன. இந்த நிலையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளும் நடந்து வருகின்றன. (ச-இ)

# ட்ரம்ப் பதிவால் பரபரப்பு



வொஷிங்டன், டிசெ.3
“அமெரிக்காவை அழிக்க கடுமையாகப் போராடிய இடதுசாரி பைத்தியங்களுக்கு நன்றி” என அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்காவை அழிக்க இடதுசாரி பைத்தியக்காரர்கள் கடுமையாக உழைத்து பரிதாபமாக தோல்வியடைந்துவிட்டார்கள். அவர்களின் கருத்துகள் மற்றும் கொள்கைகள் மிகவும் மோசமாக இருந்ததால், அமெரிக்காவை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல மக்கள் எனக்கு வாய்ப்புக் கொடுத்துள்ளனர்.
அமெரிக்கா விரைவில் நியாயமான, வலுவான, எல்லோராலும் மதிக்கப்படும் நாடாக மாறும் என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ச-45)

### வடதாரகையில்...

ததைத் தொடர்ந்து பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டனர். படகு பழுதடைந்ததால் சுமார் மூன்றரை மணிநேரம் பயணிகள் குறிகாட்டுவானில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பின்னர் குமுதினிப் படகு வரவழைக்கப்பட்டு இரவு 7.30 மணியளவிலேயே படகு நெடுந்தீவு நோக்கிப் பயணித்துள்ளது. (அ-ம-100-125)

### அதிகாரப்...

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-
'மாகாணசபை என்பதை நாம் ஏற்க மாட்டோம். ஆனால், இன்றைய மாகாணசபை முறைமை என்பது தமிழ் மக்களின் போராட்டங்களால் கிடைக்கப் பெற்றது. ஆகவே அதை நாம் எதிர்க்கவும் போவதில்லை' என ஜனாதிபதி அநுர குமார, கடந்த தேர்தல்களுக்கு முன் என்னிடம் நேரடியாகக் கூறியுள்ளார். இன்னும் பல தமிழ்த் தலைவர்களிடமும் அவர் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார் என்று நான் அறிவேன்.
இப்போது 'மாகாணசபையை அகற்றிவிட்டு, அதற்குப் பதில் நாடு தழுவிய, சம உரிமையை தருவோம்' என தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூறுகிறார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சம உரிமை என்பது வேறு. அதிகாரப் பகிர்வு என்பது வேறு.
சம உரிமை வருவது நல்லதே. ஆனால், அது சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகள் இந்த நாட்டில் உறுதிப்படுத்த இன்னும் நெடுந்தூரம் பயணிக்கவேண்டும். நாட்டின் அரசமைப்பில் மதங்கள், மொழிகள் மத்தியில் சம உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். மொழிகள் மத்தியில் சம உரிமையை நடைமுறைப்படுத்தப் படாத பாடுபட்ட எனக்கு இந்த விடயம் நன்கு தெரியும். சம உரிமை என்பது வானத்தில் பறக்கும் அழகான பறவை. மாகாணசபை என்பது கையில் இருக்கும் பறவை. வானத்தில் பறக்கும் அழகான பறவையை பற்றி கனவு கண்டுகொண்டு கையில் இருக்கும் பறவையை விட்டு விடுமாறு ஜே.வி.பி.யும், தேசிய மக்கள் சக்தியும் சொல்கின்றனவா எனக் கேட்க விரும்புகிறேன் - என்றார். (அ-ம)

### சாதாரண...

திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மாணவர்களைக் கோரியிருந்தது. எனினும், நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையைக் கருத்திற் கொண்டு விண்ணப்ப காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)

### எம்.பி.க்களின்...

வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகளை மறுபரிசீலனைசெய்வதுதொடர்பானஅறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி.சித்ரசிறி தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பான பரிசீலனைகளை முன்னெடுத்து வந்த நிலையிலேயே அந்த அறிக்கை தற்போது ஜனாதிபதியிடமும், பிரதமர் ஹரிணியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### ஒதியமலைப்...

கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு விசேட ஆத்ம சாந்தி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.
இந்த நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநான் சத்தியலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

### பிரபாகரன்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 70ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியமை மற்றும் மாவீரர் தினத்தில் புலிக்கொடி ஏற்றியமை தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், வழக்கு ஜூலை மாதம் 9ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.
பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடியமை தொடர்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட ஆறு பேரிடம் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பெற்றுள்ளனர். இதே போன்று உடுப்பிட்டிப் பகுதியில் மாவீரர்தினத்தன்று புலிக்கொடி பறக்கவிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
'பி' அறிக்கைகளைப் பரிசீலித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை வழக்கை அடுத்த வருடம் ஜூலை மாதம் ஒன்பதாம் திகதிக்கு தவணையிட்டுள்ளார். (அ-ம-100)

### புலிகளை...

களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுஜன பெரமுன குற்றஞ்சாட்டியுள்ளது.
பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-
மக்கள் மத்தியில் குரோதத்தை விதைப்பதற்கு ஜே.வி.பி.யினர் சமூக வலைத்தளங்களையே பயன்படுத்தினர். போலியான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்பி அரசியல்வாதிகளின் வீடுகளை தீக்கிரையாக்குவதற்கு வழிவகுத்தனர். ஆனால் தற்போது ஆட்சி அதிகாரம் அந்தக் கட்சியினருக்குக் கிடைத்துள்ள நிலையில், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்படுவதை நாம் கண்டிக்கின்றோம். பயங்கரவாததடைச்சட்டம் நீக்கப்படும் எனக் கூறிவந்த ஜே.வி.பி.யினர் அந்தச் சட்டத்தின் கீழ்தான் கைதுகளை மேற்கொண்டுள்ளனர்.
வடக்கு, கிழக்கில் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகின. மாவீரர்தினம் கடைப்பிடிக்கப்படவில்லை என்று ஒருபோதும் கூறமுடியாது. பிரபாகரனுக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் இடப்படும் பதிவுகளுக்கு எதிராக பொலிஸார் செயற்பட்டுள்ளனர். ஆனால் பிரபாகரனை கடவுள் என விளித்து, மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தியவர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை கவலையளிக்கின்றது - என்றார். (அ-ம-44)

### உள்ளூராட்சித்...

சபாநாயகர் தலைமையில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில் கட்சித் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.
உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கு புதிதாக வேட்புமனு கோருவதற்கு கட்சித் தலைவர்களுக்கு இடையில் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில், இன்றைய தினம் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 • 05 • 1960




மறைவு
01 • 12 • 2024

## அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (செந்தில்)

**(வலி வடக்கு இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப்பதிவாளர்)**

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் செந்தில்குமரேசன் அவர்கள் நேற்று முன்தினம் (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை அகாலமரனம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் (ADR), பரமேஸ்வரி (திரவியம்) தம்பதியினரின் அன்பு மகனும் கால்ஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌரிதேவியின் அன்புக் கணவரும் டிலக்ஸன் (NORTHERN CENTRAL HOSPITAL), சுவாதிகன் (ANGC BESTECH ENGINEERING PVT LTD), சுவாரகன் (MANIPAY INTERNATIONAL SCHOOL TECHNICIAN) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி (London), கௌரி (London) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இலங்கரத்தினம் (London), குகசேனன் செட்டியார், கௌரிகுமாரன், சசிகுமாரன் (Swiss), சசிகலா (Swiss), ரசிகலா (Swiss) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.



அன்னார் பரியோவான் கல்லூரி பழைய மாணவரும், V.T.Kandiah Stors's உரிமையாளரும், வலி வடக்கு இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப்பதிவாளர், தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பரிபாலன சபை தலைவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2024) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**கணேசன் கருணை**
**தாவடி மானிப்பாய் வீதி,**
**பிள்ளையார் கோவிலடி,**
**தாவடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செபஸ்தியாம்பிள்ளை (செட்டி) ஜெயந்திரன்



தோற்றம் 23.02.1963 மறைவு 01.12.2024

யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பூநாறி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை (செட்டி) ஜெயந்திரன் நேற்று முன்தினம் (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை-இராசாத்தி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவரான கந்தையா மற்றும் மணி ஆகியோரின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் மாலினி (சுவிஸ்), அன்ரன் (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி மற்றும் சுகந்தி (சுவிஸ்), ஜெயந்தி, தமயந்தி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவராசா மற்றும் மகாலிங்கம், தங்கராணி, தங்கராசா, சிவரூபன் (சுவிஸ்), ராணி (சுவிஸ்), பொபி (சுவிஸ்), சசிகரன், நிச்சி ஆகியோரின் மைத்துனரும் மெனிற்றா (பிரான்ஸ்), டன்சி, முகுந்தன் (சுவிஸ்), றோய், சலீம், ஆகியோரின் நேசம் நிறைந்த தந்தையும் ரவி (பிரான்ஸ்), அகிலன், ரூபினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் டினுசன் (பிரான்ஸ்), டிலான் (பிரான்ஸ்), டவ்வினா (பிரான்ஸ்), கிறிஸ்ரியா, ஆரோன், டனிக்கா, பிறிசா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ராஜேந்திரா வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பூநாறி மர வீதி,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

(CS 56810) P-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**070 398 5096**
**077 707 0691**

# மரண அறிவித்தல்

## குணரத்தினம் மகாலக்ஸ்மி



அன்னை மடியில் 12.02.1948 ஆண்டவன் அடியில் 01.12.2024

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் மகாலக்ஸ்மி அவர்கள் நேற்றுமுன்தினம் (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைலிங்கம் - மனோன்மணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், குணரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சற்குணதேவி - சந்திராதேவி, காலஞ்சென்ற இந்திரநாதன் மற்றும் சத்தியதேவி (கனடா), காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் இந்திராதேவி (லண்டன்), நடராசலிங்கம் (ஜேர்மன்), கேகயலிங்கம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வனஜா (கனடா), வத்சலா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாஸன் (கனடா), கவிதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், முத்துலிங்கம் (ஜேர்மன்), காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் பரமேஸ்வரன் (கனடா), றஞ்சனிதேவி, ஸ்ரீறஞ்சிற் (லண்டன்), மதிஒளி (ஜேர்மன்), நவறஞ்சனி (ஜேர்மன்), காலஞ்சென்ற செல்வராசா (கனடா) மற்றும் இராஜேந்திரன், சிவராசா, தங்கம்மா, நாகேஸ்வரி, வரலக்ஸ்மி ஆகியோரின் மைத்துனியும், ஆதவி (கனடா), அபிரன் (கனடா), பிரணவன் - றம்மியா, கௌதமன் (லண்டன்), ஜெனித்தா, துஷாந்தன் - ஹம்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும், இனியன், துருவன், விஹானா, எழில் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(CS/56804) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 407 5894**
**077 600 8847**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org